Government Hospital, Harur.

* 389 *Q.*—R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether a sum of about two lakhs have been sanctioned for the construction of buildings for the hospital at Harur in Salem district ; and

(*b*) whether the Government are aware that the present hospital is located in an insanitary and unsuitable place?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) It is reported that the local weekly shandy is held in the vacant land adjoining the Government Hospital, Harur and that it causes insanitary conditions around the institution. Necessary steps are being taken to shift the shandy to a far off place and to construct a compound wall for the hospital.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த ஏற்பாட்டை இன்னும் எத்தனை நாட்களுக்குள் செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எவ்வளவு சீக்கிரமாக இந்தச் சுவரைக் கட்ட முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கட்ட வேண்டும் என்று பப்ளிக் ஒர்க்ஸ் பிரதம என்ஜினியருக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

Taluk headquarters hospital, Paramakudi

* 400 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal for the construction of a taluk headquarters hospital at Paramakudi in Ramanathapuram district, and if so, when; and

(*b*) whether steps will be taken to expedite the scheme in view of the proposed conversion of the Town Panchayat into a Municipality?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) பரமக்குடி அரசாங்க மருத்துவமனைக்கு புதுக் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் தேசிய நெருக்கடியை உத்தேசித்துத் தள்ளிப் போடப் பட்டுள்ளது.

(இ) நல்ல காலம் வரும்போது இத்திட்டம் மேற்கொள்ளப் படும். (சிரிப்பு)

திரு. செ. சீனிவாசன் : தேசிய நெருக்கடியிலிருந்து விலக் களித்து வேறு சில ஊர்களில் தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி வேறு சில ஆஸ்பத்திரிகளுக்கு விலக்கு ஒன்றும் அளிக்கவில்லை. பரமக்குடி ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரையில், அதைக் கட்ட வேண்டு

28th March 1964]

மென்ற முயற்சி 1950-ம் ஆண்டிலிருந்து இருந்து வருவதால், அந்தக் காரணத்தை உத்தேசித்தும், நீண்ட காலம் கடந்து விட்டதை உத்தேசித்தும், கட்டுகின்றபோது இதற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு கட்டப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, 'தேசிய நெருக்கடி காரணமாக வேறு எந்த ஊருக்கும் கொடுக்கவில்லை' என்று சொன்னார்கள். ஆனால், போடியில் 6 லட்ச ரூபாய்ச் செலவில் ஒரு கட்டடம் கட்டப்படுகிறது. இடம் வாங்க 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முனிசிபல் நகரம் அது. அப்படிப்பட்ட நகரத்தில் ஆஸ்பத்திரி கட்டும் விஷயத்தில் தேசிய நெருக்கடி என்கிற காரணத்தைக் காட்டித் தள்ளிபோடாமல், உடனடியாகக் கட்டடம் கட்ட வேண்டிய ஏற்பாடு செய்ய அமைச்சர் முயற்சிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பரமக்குடி ஆஸ்பத்திரியைப் பொறுத்த மட்டில் அதற்காக 5-20 ஏக்கர் நிலம் அக்வையர் செய்தாய்விட்டது. அதைக் கட்டவேண்டும் என்ற உத்தேசம்தான் அரசாங்கத்திற்கு இருக்கிறது. தேசிய நெருக்கடி காரணமாகக் கட்டப்படாமல் தள்ளிப்போடப்பட்ட கட்டடங்களை மீண்டும் எடுத்துக்கொள்ளும்போது, பரமக்குடி ஆஸ்பத்திரிக் கட்டடமும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: 1954-ம் ஆண்டில் ஸௌத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் ஸப்ளை கார்ப்பரேஷனை எடுக்கும்போது, அந்தக் கட்டடத்தில் பரமக்குடி ஆஸ்பத்திரி அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப்பற்றி மீண்டும் பரிசிலனை செய்து, அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பரமக்குடி ஆஸ்பத்திரிக்குப் புதுக் கட்டடமே கட்டவேண்டுமென்ற ஏற்பாடு இருக்கிறது. பழைய கட்டடத்திற்குத் திருப்பிப் போக வேண்டும் என்ற எண்ணத்தையே கனம் அங்கத்தினர் கைவிட்டு விடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: நல்ல காலம் வரும்வரை வியாதி காத்துக்கொண்டிருக்குமா? நல்ல காலம் எப்பொழுது வரும் என்று அமைச்சர் அவர்கள் எண்ணுகிறார்கள்?

கனம் சபாநாயகர்: நல்ல காலம் வரும்போது வியாதி போய் விடும்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: வியாதி காத்துக் கொண்டிருக்காது, நல்ல காலத்திற்கும் கெட்ட காலத்திற்கும், ஆனால், ஆஸ்பத்திரி காத்துக் கொண்டிருக்கலாம் என்று தான் நான் கூறினேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கும் தொழில்.

* 421. **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து:** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—